மண்டல ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவனங்களுக்கிடையே மாவட்டங்களை சமமாகப் பகிர்தல் – கரூர் மாவட்டத்தை பவானிசாகர் மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனத்தின் கீழ் கொண்டுவருதல்.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (ஊ.3) துறை

அரசாணை (நிலை) எண்.41, நாள் 12.3.2008.

படிக்கப்பட்டவை

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் ஆணையர் (பயிற்சி) கடிதம்
ந.க.எண். 80656/2007/பயிற்சி.2, நாள் 19.11.2007.

* * * *

**ஆணை**

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் ஆணையர் (பயிற்சி) தமிழ்நாட்டில் ஐந்து மண்டல ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவனங்கள் உள்ளன என்றும், இதில் கரூர் மாவட்டத்திலிருந்து பயிற்சியாளர்கள் பட்டுக்கோட்டை செல்ல 182 கி.மீ. பயணம் செய்யவேண்டி உள்ளதால் இம்மாவட்டத்தை பவானிசாகர் மண்டல ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவனத்தின் கட்டுப்பாட்டிற்கு மாற்றினால் 42 கி.மீ. குறைவாக 140 கி.மீ. மட்டுமே பயணம் செய்ய வேண்டி இருக்கும் என்றும் கூறியுள்ளார். மேலும், பட்டுக்கோட்டை மண்டல ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவனத்தின் கீழ் தற்போது எட்டு மாவட்டங்கள் இருக்கின்றன. ஆனால் பவானிசாகர் மண்டல ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவனத்தின் கீழ் நான்கு மாவட்டங்கள் மட்டுமே உள்ளன. ஆகவே, கரூர் மாவட்ட பயிற்சியாளர்களின் வசதிக்காகவும், மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனங்களுக்கிடையே மாவட்டங்கள் சமபங்கீடாக இருப்பதற்காகவும் கரூர் மாவட்டத்தினை பட்டுக்கோட்டை மண்டல ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவனத்தின் கட்டுப்பாட்டிலிருந்து மாற்றி பவானிசாகர் மண்டல ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவனத்தின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரலாம் என்று ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் ஆணையர் (பயிற்சி) அரசுக்கு முன்மொழிவு அனுப்பியுள்ளார்.

2. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (பயிற்சி) ஆணையாளரின் முன்மொழிவினை அரசு கவனமுடன் பரிசீலித்து அதனை ஏற்றுக்கொள்ள முடிவுசெய்து, பயிற்சியாளர்களின் வசதிக்காக கரூர் மாவட்டத்தை பட்டுக்கோட்டை மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் கட்டுப்பாட்டிலிருந்து மாற்றி பவானிசாகர் மண்டல ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவனத்தின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர ஆணையிடுகிறது.

**க. அஷோக் வர்தன் ஷெட்டி,**
சிறப்பு ஆணையர் மற்றும் செயலாளர்.